**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் 21
# உபத்திரவம் – 15

## தேசங்கள் நியாயம் தீர்க்கப்படும்

### தேசங்களை குறித்ததான தேவ நோக்கம் – வரலாறு

எல்லா தேசங்களும் உபத்திரவத்தை எதிர்கொள்ளும் என்பதை குறித்து வேதாகமத்திலுள்ள போதுமான வேத வாக்கியங்களின் மூலம் நீங்கள் கண்டடைவீர்கள்.

வேதாகமத்தின் *I* **கொரிந்தியர்** *10:32*இல், இருந்து நமது காலகட்டத்தில் மக்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டதை நமக்கு சுட்டிக்காட்டுகிறது:

- யூதர்கள்,
- தேவனுடைய சபை மற்றும்
- தேசங்கள்

உலகம் முழுவதும் இத்தகைய பெரும் பிரச்சினைகள் இருப்பதை நாம் காண்கிறோம். ஏன்?

**சங்கீதம்** *2: 1-2,* [1]யூதரல்லாத மனிதர்கள் ஏன் இவ்வளவு கோபமாயிருக்கிறார்கள்? ஏன் அந்தத் தேசங்கள் மதியீனமான திட்டங்களை வகுக்கின்றன? [2]அவர்களுடைய அரசர்களும்,

தலைவர்களும் கர்த்தரையும், கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசனையும் எதிர்க்க ஒன்றுகூடினார்கள்.

*நிராகரிப்பு!*

***ஏசாயா** 57:19-21,* [19]*தூரமாயிருக்கிறவர்களுக்கும் சமீபமாயிருக்*
*கிறவர்களுக்கும் சமாதானம் சமாதானம் என்று கூறும்*
*உதடுகளின் பலனைச் சிருஷ்டிக்கிறேன், அவர்களைக்*
*குணமாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*
[20]*துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்*
*கிறார்கள்; அது அமர்ந்திருக்கக் கூடாமல், அதின் ஜலங்கள்*
*சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது.*
[21]*துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன்*
*சொல்லுகிறார்".*

மக்களும் தேசங்களும் தொடர்ந்து தேவனுடைய மேல்முறையீட்டையும் சமாதானத்தையும் நிராகரித்தார்கள்.

ஆனால் அந்திகிறிஸ்து வரும்போது பொய்யான சமாதானத்தை, போலிதனத்தை கொண்டு வருவான்.

அதனால், சில நேரங்களுக்கு தற்காலிக சமாதானம் இருக்கும்.

- ஒரே தேசம்
- ஒரே செலாவணி *(currency)*
- ஒரே ஆட்சி
- ஒரே ஒருங்கிணைந்த உலகம்.

ஆனால் இது தற்காலிகமே!! நாம் அறிந்தது போல இது அர்மகெதோனில் *(Armageddon)* நிறைவு பெரும்!

***லூக்கா** 21:24, பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.*

*இஸ்ரவேலர்கள் எப்போது புறஜாதியாரால் மிதிக்கப்படுவார்கள் என்பதைக் குறித்த குறிப்பிட்ட கால அட்டவனையை இயேசு அவர்களிடம் கொடுத்தார். புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும்.*

*600 கி.மு. காலத்தில் இருந்தே அவர்கள் தேவனுக்கு எதிராக உள்ளனர். தேவன் இஸ்ரவேலர்களை அவர்களுக்கு வாக்குத்தத்தம் அளிக்கப்பட பூமியை விட்டு துரத்தி அடித்து 2,600 ஆண்டுகளுக்கு மேல் முடிந்துவிட்டது.*

***சங்கீதம்** 2:1- 4, [4] பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார்.*

*எசேக்கியேல் புத்தகத்தின் 10ஆம் மற்றும் 11ஆம் அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேலை விட்டு விலகியதற்கான தெளிவான அடையாளம் கொடுக்கப்பட்டுள்ளது. பாபிலோனுக்குச் (Babylon) சிறைபிடித்துக்கொண்டு போனபோது எசேக்கியேல் இந்த வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய் கூறினார்.*

***எசேக்கியேல்** 10:18, கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டுப் புறப்பட்டு, கேருபீன்களின்மேல் நின்றது.*

***எசேக்கியேல் 11:23,** கர்த்தருடைய மகிமை நகரத்தின் நடுவிலிருந்தெழும்பி, நகரத்துக்குக் கிழக்கே இருக்கிற மலையின்மேல் போய் நின்றது.*

*இந்த காலகட்டத்தில் தானியேல் பாபிலோனிய ராஜாவின் அரண்மனையில் சேவை செய்து கொண்டிருந்தான். தேவன் ராஜ்யங்களின் எதிர்காலத்தைக் குறித்து அவருக்கு வெளிப்படுத்தினார்.*

*தானியேலின் 2ஆம் அதிகாரத்தின் நேபுகாத்நேச்சாரின் (Nebuchadnezzar) கனவும் அதன் விளக்கமும்.*

*நீங்கள் அந்த சம்பவத்தை அறிந்தபடியே, ராஜாவிற்கு ஒரு கனவு வந்தது. மிகுந்த குழப்பம் அடைந்து அதனை நினைவில் கொள்ள முடியாமலும் அதனுடைய அர்த்தத்தை அறியாமலும் இருந்தார். அதனால், அவர் எல்லா மந்திரவாதிகளையும் அழைத்து அந்த கனவை கூறி அதன் விளக்கத்தை கூறுமாறு கேட்டார். அதை செய்யாமல் போனால் அவர்கள் தங்கள் உயிரையே இழக்க நேரிடும். தானியேலும் அவருடைய மூன்று நண்பர்களும் தேவனிடம் ஜெபம் செய்து பரலோகத்திலுள்ள தேவனிடமிருந்து வெளிப்பாட்டை பெற்றனர்.*

*தானியேல் அந்த கனவை விளக்கினார்.*

***தானியேல்** 2:31-35, 31 "ராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக்கண்டீர்; அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது; அது உமக்கு எதிரே நின்றது; அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது.*
*32அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும்,*
*33அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது.*
*34நீர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும்*

களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போட்டது. [35]அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடைகாலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டுபோயிற்று; சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று.




தேவனால் தனியேலுக்கு வழங்கப்பட்ட விளக்கம்:

***V37-38,*** [37]ராஜாவே, நீர் ராஜாதி ராஜாவாயிருக்கிறீர்; பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார். [38]சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும்

அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே.

நேபுகாத்நேச்சார் *(Nebuchadnezzar) 43* ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார்.

நேபுகாத்நேச்சார் *(Nebuchadnezzar)* ராஜாவாக ஆண்டபோது புறஜாதியாரின் காலம் துவங்கியது.

*V39,* [39] உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யமொன்று எழும்பும்.

தோள்களும் மார்பும் ஆயுதமும் உடைய ராஜ்யம் மேதிய-பாரசீகருடையது *(Medo-Persia).* மேதியர் *(Medes)* மற்றும் பாரசீகர் *(Persians)* பாபிலோனிய பேரரசைக் கைப்பற்றியது. இருவரும் ஒரு பொதுவான அரசாங்கத்தில் ஒன்றாக இணைந்தனர். அவர்களுடை சிலைக்கு இரண்டு கைகளும், இரண்டு தோள்களும், மார்புக்கு இரண்டு பக்கங்களும் மேதியர் *(Medes)* மற்றும் பாரசீகர்களுக்கிடையேயான *(Persians)* இரு மடங்கு ஒற்றுமையைக் குறிக்கும் வகையில் உள்ளன. அவர்களே மேதிய-பாரசீக *(Medo-Persia)* சாம்ராஜ்யம் என்று வரலாறு நமக்கு விளக்குகிறது.

*V39,* [39] உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யமொன்று எழும்பும்.

உலகின் மூன்றாவது ராஜ்யம் மகா அலெக்சாண்டரின் *(Alexander)* கிரேக்க *(Greece)* ராஜ்யமாகும்.

**தானியேல்** 8:5-7, [5] நான் அதைக் கவனித்துக்கொண்டிருக்கையில், இதோ, மேற்கேயிருந்து ஒரு வெள்ளாட்டுக்கடா நிலத்திலே கால் பாவாமல் தேசத்தின்மீதெங்கும் சென்றது; அந்த வெள்ளாட்டுக்கடாவின் கண்களுக்கு நடுவே விசேஷித்த ஒரு கொம்பு இருந்தது. [6] நான் ஆற்றின் முன்பாக நிற்கக்கண்ட இரண்டு கொம்புகளுள்ள ஆட்டுக்கடாவினிடமட்டும் அதுவந்து, தன்பலத்தின் உக்கிரத்தோடே அதற்கு எதிராகப் பாய்ந்தது. [7] அது ஆட்டுக்கடாவின் கிட்டச் சேரக்கண்டேன்; அது ஆட்டுக்கடாவின்மேல் கடுங்கோபங்கொண்டு அதை முட்டி, அதின் இரண்டு கொம்புகளையும் முறித்துப்போட்டது, அதின்முன் நிற்க ஆட்டுக்கடாவுக்குப் பலமில்லையால், வெள்ளாட்டுக்கடா அதைத் தரையிலே தள்ளி மிதித்துப்போட்டது, அதின் கைக்கு ஆட்டுக்கடாவைத் தப்புவிப்பார் இல்லை.

ராஜ்யம் எவ்வாறு விழுந்து புதிய சக்தியை பெறுகிறது பற்றிய மிகத் துல்லியமான தீர்க்கதரிசனம்.

ஆட்டிற்கு இரண்டு கொம்புகள் இருந்தன. வல்லமை வாய்ந்த வெள்ளாட்டுக்கடா (Ram) முழு உலகையும் எடுத்துக்கொண்டது. இந்த மிக மென்மையான கொம்பை கொண்டிருந்த அலெக்சாந்தர் (Alexander) மேதிய-பெர்சியாவை (Medo-Persia) முறியடித்தார், ஆனால் விரைவில் அது உடைந்து, மற்ற நான்கு கொம்புகள் வெளியே வந்தன.

அலெக்ஸாண்டரின் (Alexander) வாழ்க்கை முடிவில் என்ன நடந்தது என்பதை வரலாற்றில் இருந்து நாம் நினைவில்

*கொள்கிறோம். அவரது மரணத்திற்குப் பிறகு அவருடைய இராஜ்யம் தனது நான்கு தளபதிகளால் கைப்பற்றப்பட்டது.*

***தானியேல்** 2:40,* நாலாவது ராஜ்யம் இரும்பைப்போல உரமாயிருக்கும்; இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கிச் சின்னபின்னமாக்குகிறதோ, அப்படியே இது நொறுக்கிப்போடுகிற இரும்பைபோல அவைகளை யெல்லாம் நொறுக்கித் தகர்த்துப்போடும்.

*ரோமே (Rome) பிரிக்கப்பட்ட நான்காவது இராஜ்யம். ரோம் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையில் பிரிந்தது இருந்தது.*

*கால் விரல்களின் ஒரு பகுதி இரும்பினாலும், மற்றொரு பகுதி களிமண்ணினாலும் இருந்தபடியால், ராஜ்யத்தின் ஒரு பகுதி ஓரளவு வலுவாகவும் மற்றொரு பகுதி உடைக்கப்பட்டும் இருக்கும்.*

*ரோமர்கள் என்ன செய்தார்கள் என்று உங்களுக்கு தெரியுமா?*

*அவர்கள் தங்களுடைய இரும்பு மனிதர்களை வெற்றிபெற்ற களிமண்ணோடு சேர்த்து வைத்தார்கள். அவர்கள் இங்கே சிறிது புரட்சிகளும், அங்கே கொஞ்சம் புரட்சியுமாக எப்போதும் தொந்தரவு கொடுத்துக்கொண்டு இருந்தார்கள்.*

***V44-45**, [44]அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையில்பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெண்கலத்தையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது*

*அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும். [45] இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகா தேவன் ராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார்; சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான்."*

*நீங்கள் கண்ட வரையில் ஒரு கல் கையில்பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்டது."*

*எந்த மனித கருவிகளும் இல்லாமல் கிறிஸ்துவின் கன்னி பிறப்பை பற்றிதான் மேலே கூறப்பட்டுள்ளது.*

*அந்த கல் என்ன என்பது உங்களுக்கு தெரியுமா?*

*அது இயேசு கிறிஸ்துவே!*

*அவர் புறஜாதி உலகத்தை நொறுக்கி, பூமியை அவருடைய சொந்த மகிமையினாலும் அவருடைய சொந்த ராஜ்யத்தையும் கொண்டு நிரப்புகிறார்.*

*அந்த ராஜாவிற்கு தான் கனவில் கண்டது என்னவென்று தெரியாது. மேலும் தானியேல் அவருக்கு விளக்கினார்.*

*இப்போது நம்முடைய கவனத்தை கால் விரல்களின் மீது திருப்புவோம்:*

*காலடிகளிடம் நொறுக்கப்பட்ட பத்து கால்விரல்கள் உள்ளன, அவை பத்து மடங்கு ஒற்றுமைக்குள் இருக்கும். பத்து நாடுகள் கூட்டமைப்பு அல்லது ஐக்கியம்.*

***தானியேல்** 7:7, [7] "அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப்பற்கள்*

இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது. 8 அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தினகொம்புகளில் மூன்றுபிடுங்கப்பட்டது; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷகண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவகளைப் பேசும் வாயும் இருந்தது.

ரோமானிய பேரரசை வேறு எந்த ராஜ்யமும் கைகொள்ளவில்லை என்பதை வரலாற்றிலிருந்து தயவு செய்து நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் பலவீனமடைந்தனர்.




இப்போது எதிர்காலத்தில் எழும் இராஜ்யம் ரோமாவிலிருந்து எழப்போகிறது, இது வெளிப்படுத்துதல் புத்தகத்தில் முன்னறிவிக்கப்படுகிறது.

***வெளி* *17:12-13,*** [12] *"நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாம்; இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை; இவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.* [13] *இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள்; இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்.*

*வரவிருக்கும் இந்த பத்து நாடுகள் கொண்ட ராஜ்யத்தை பத்து ராஜாக்கள் என்று அழைக்கப்படும் இது கிறிஸ்துவின் பெரிய அடி மூலம் தீர்க்கப்படும்.*

*தேவன் நான்கு ராஜ்யத்தையும் கொண்டுவந்திருந்தால், நிச்சயம் அவர் தம்முடைய தீர்க்கதரிசனங்களில் மீதமுள்ளவற்றையும் நிச்சயமாக நிறைவேற்றுவார்.*

*தானியேலின் புத்தகத்திலிருந்து தீர்க்கதரிசனங்கள், கனவுகள் மற்றும் அதன் விளக்கங்களை நாம் பார்க்கிறபடியே எதிர்கால இராஜ்யம் என்னவாக இருக்கும் என்பதையும் நாம் பார்க்கலாம்.*

***தானியேல்* *7:23-25,*** [23] *"அவன் சொன்னது: நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் ராஜ்யமாம்; அது எல்லா ராஜ்யங்களைப்பார்க்கிலும் வேறாயிருந்து, பூமியை எல்லாம் பட்சித்து, அதை மிதித்து, அதை நொறுக்கிப்போடும்.* [24] *அந்தப் பத்துக்கொம்புகள் என்னவென்றால், அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்; அவர்களுக்குப்பின்பு வேறொருவன் எழும்புவான்; அவன் முந்தினவர்களைப்பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்று ராஜாக்களைத் தாழ்த்திப்போட்டு,* [25] *உன்னதமானவருக்கு*

விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.

முதல் கட்டத்தில் பத்து-நாடுகள் கூட்டமைப்பு எழும். அது புதுப்பிக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யமாக இருக்கலாம். பண்டைய ரோம் தெற்கு ஐரோப்பா, வட ஆபிரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவை ஆக்கிரமித்திருந்தது. பண்டைய ரோம் முன்னதாக இருந்த இடத்தில்தான் அது இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இரண்டாம் கட்டம், இந்த பத்து கொம்பு அல்லது பத்து ராஜாக்களில் இருந்து, ஒவ்வொரு கொம்பும் சக்தியை குறிக்கிறது. மற்றொன்று அதிலிருந்து எழும். அந்த ஐக்கியத்திலிருந்து எழும்பும் வலுவான மனிதனே இந்த முழு உலகையும் ஆட்சி செய்வான். அவனையே அந்திகிறிஸ்து என அழைப்பார்கள்.

மூன்றாம் கட்டம், அவன் மூன்று விதமான அரசர்களை மேற்கொண்டு/அடிபணிய வைப்பார். ஒருவேளை அவன் இந்த மூன்று ராஜாக்களுக்கு எதிராக போராட வேண்டும்.

அவன் மற்ற மூன்று ராஜாக்களுக்கு செய்ததைப் பார்த்து மற்ற எல்லா ராஜாக்களும் மனப்பூர்வமாக அவனிடம் கீழ்ப்படிவார்கள்.

*அந்திகிறிஸ்து பரிசுத்தவான்களை எடுத்துக் கொண்டும் அவர்களை துன்புறுத்தி கொடுமைப்படுத்தி மேலும் நேரத்தையும் சட்டங்களையும் மாற்ற நினைப்பான்.*

*அவன் அனைத்து சட்டங்களையும் மாற்றி, மூன்றரை ஆண்டுகளுக்கு பழிவாங்கும் விதமாக ஆட்சிசெய்வான்!*

*உபத்திரவத்தின் இரண்டாம் பகுதி.*

- *ஒன்று, பத்து தேசிய ஒன்றியம்*
- *இரண்டு, ஆட்சியாளர் அதிகாரத்திற்கு உயர்கிறான்*
- *மூன்று, அவன் பத்து பேரையும் ஆட்சி செய்து உலகம் முழுவதையும் எடுத்துக்கொள்வான்*
- *நான்கு, 3 ½ ஆண்டுகளுக்கு உபத்திரவம் ஆரம்பமாகும்.*
- *ஐந்து, அந்திகிறிஸ்துவை நொறுக்கி, அழித்து தேவன் அவரது இராஜ்யத்தை அமைபார்.*

*7 வருட காலத்தின் இரண்டாம் பாதியில் சகல தேசங்களும் இந்த மகா உபத்திரவத்திற்குள் கடந்து செல்லும்.*

***ஒபதியா** 1:16, நீங்கள் என் பரிசுத்த பர்வதத்தின்மேல் மதுபானம்பண்ணினபடியே எல்லா ஜாதிகளும் எப்பொழுதும் மதுபானம்பண்ணுவார்கள்; அவர்கள் குடித்து விழுங்குவார்கள். இராதவர்களைப்போல் இருப்பார்கள்.*

*அவர்கள் முன் எப்பொழுதும் அனுபவித்திராத தண்டனையைப் பெறுவார்கள்!*

*அர்மகெதோனில் (Armageddon) நடைபெற இருக்கும் இறுதி யுத்தத்தை பற்றியும் தேவன் தீர்க்கதரிசனமாய் கூறியுள்ளார்.*

***சகரியா** 12:9, அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன்.*

***ஏசாயா** 34:1-2, ஜாதிகளே, கேட்கிறதற்குக் கிட்டிவாருங்கள்; ஜனங்களே கவனியுங்கள்; பூமியும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதில் உற்பத்தியான யாவும் கேட்கக்கடவது.*
*[2] சகல ஜாதிகளின்மேலும் கர்த்தருடைய கடுங்கோபமும், அவர்களுடைய சகல சேனைகளின்மேலும் அவருடைய உக்கிரமும் மூளுகிறது; அவர்களைச் சங்காரத்துக்கு நியமித்து, கொலைக்கு ஒப்புக்கொடுக்கிறார்.*

***சகரியா** 14:2-3, எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்; நகரம் பிடிக்கப்படும்; வீடுகள் கொள்ளையாகும்; ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்; நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள்; மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டுபோவதில்லை.*
*[3] கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே போராடுவார்.*

***எரேமியா** 25:29-33,*
*[29] இதோ, தீங்கைக் கட்டளையிட நான் என் நாமம் தரிக்கப்பட்ட நகரத்திலே துவக்கும்போது, நீங்கள் தண்டனைக்குத் தப்புவீர்களோ? நீங்கள் தப்புவதில்லை; நான் பூமியின் எல்லாக் குடிகளின்மேலும் பட்டயத்தை வரவழைக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*
*[30] ஆதலால், அவர்களுக்கு விரோதமாக இந்த வார்த்தைகளையெல்லாம் தீர்க்கதரிசனமாக உரைத்து, அவர்களை நோக்கி: கர்த்தர் உயரத்திலிருந்து கெர்ச்சித்து, தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து தம்முடைய சத்தத்தைக் காட்டி, தம்முடைய தாபரத்துக்கு விரோதமாய்க் கெர்ச்சிக்கவே*

கெர்ச்சித்து, ஆலையை மிதிக்கிறவர்கள் ஆர்ப்பரிப்பதுபோல் பூமியினுடைய எல்லாக் குடிகளுக்கும் விரோதமாக ஆர்ப்பரிப்பார் என்று சொல் என்றார். [31]ஆரவாரம் பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும்; ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; மாம்சமான யாவரோடும் அவர் நியாயத்துக்குள் பிரவேசிப்பார்; துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார் என்று கர்த்தர் சொல்லுகிறார். [32]இதோ, ஜாதிஜாதிக்குத் தீமைபரம்பும், பூமியின் எல்லைகளிலிருந்து மகா புசல் எழும்பும்.
[33]அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் அடக்கம்பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்.

***மீகா 5:15***, செவிகொடாத புறஜாதிகளிடத்திலே கோபத்தோடும் உக்கிரத்தோடும் நீதியைச் சரிக்கட்டுவேன் என்றார்.

***செப்பனியா 3:8***, "ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிரகோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும்,

ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்.